# தெருக்கூத்து அன்றும் இன்றும்

**ச.கௌரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி
திருவையாறு

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

உலகில் மனிதர்கள் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் ஒவ்வொரு கலை வெளிப்படுகிறது. கலையானது தொடர்பு சார்ந்து, பண்பாடு சார்ந்து, வாழ்வியல்நெறி சார்ந்து, அழகு சார்ந்து எனப் பலவிதமான உருவ அமைப்பைப் பெற்றுள்ளது. மனிதர்களின் பண்பாடு வளரவளரக் கலை மென்மேலும் பல புது பரிணாமத்தினைப் பெற்றுவருகிறது. கலையானது நவீன காலத்திற்கு முன், நவீன காலத்திற்குப்பின் எனப் பார்க்கப்பட்டாலும், அன்றுமுதல் இன்றுவரை கலையானது மக்களை ஈர்க்கும் மாபெரும் சக்தியாகவே விளங்கிவருகிறது. இக்கலைகள் நாட்டுப்புறக்கலைகள், செவ்விசைக்கலைகள் எனப் பல வடிவங்களைத் தன்னுள்ளே கொண்டிருந்தாலும், நாட்டுப்புறக்கலைகளே எல்லாக் கலைகளுக்கும் ஆணி வேராக அமைகின்றன. நாட்டுப்புறக்கலைகளை அடிப்படையாகக்கொண்டே பிற கலைகள் வளர்ச்சிஅடைந்து தற்போதைய நிலையை அடைந்துள்ளன. நாட்டுப்புறக்கலை என்பது, நாடு, புறம், கலை, அதாவது நாட்டிலுள்ள தனிப்பட்ட ஒழுக்கம், அரசர்கள், போர், தொழில்கள், வாழ்க்கை முறை, தெய்வம் போன்றவற்றைப் பற்றிக் கூறும் கலையே நாட்டுப்புறக்கலை எனலாம். இறைவழிபாடுகளோடு தொடர்புடைய கலைகளும் நாட்டுப்புறக் கலைகள் ஆகும். அவை, கரகம், காவடி, பொய்க்கால்குதிரை, ஒயிலாட்டம், மயிலாட்டம், தேவராட்டம், கணியான்கூத்து, வில்லுப்பாட்டு, தெருக்கூத்து போன்ற பல.

நாட்டுப்புறக் கலைகளுள் ‘கூத்து’ என்ற கலைவடிவம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அதற்கான சான்றுகள் சங்க கால நூல்களில் காணமுடிகிறது. புறநானூற்றில் ‘கூத்தர் ஆடுகளம் கடுக்கும்’ (புறம் - 28) என்ற குறிப்புக் காணப்படுகிறது. தமிழர் கூத்தைப் பற்றிய நூலான சாத்தனார் எழுதிய கூத்த நூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**‘மோனத்து இருந்த முன்னோன் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஈட்டத்து இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே’ (கூத்தநூல் - தோற்றுவாய்)**

இறைவன் ஆடிய ஆதிக்கூத்தில் உடுக்கையில் இருந்து பிறந்தது ஓசை எனவும், ஓசையின் சூழலிலிருந்து இசையின் உயிர்ப்பும், அதிலிருந்து ஆட்டமும், ஆட்டத்திலிருந்து கூத்தின் அமைதியும் (ஒழுங்கு), அவ்வமைதியிலிருந்து நாட்டியக்கோப்பும் (ஒழுங்கு), அவ்வித ஒழுங்கிலிருந்து நாடக வகைகளும் தோன்றின என கூத்தின் பிறப்பையும், இயல்பையும் பற்றி சாத்தனார் கூறுவதை ‘தமிழ் நாடக வரலாறு’ என்னும் நூல் எடுத்தியம்புகிறது.

இதனைப்போல திவாகரநிகண்டு கீழ்க்கண்டவாறு இயம்புகிறது.

**'நடமே நாடகம் கண்ணுள் நட்டம்**
**பரதம் ஆடல் தாண்டவம் பரதம்**
**ஆலுதல் தூங்கல் வாணி குரவை**
**நிலையம் நிறுத்தம் கூத்தெனப் படுமே' (திவாகர நிகண்டு)**

திருவள்ளுவர் தனது திருக்குறளில்,

**'கூத்தாட்டு அவைக் குழாத்து அற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று' (திருக் - 332)**

அதாவது, சேர்த்து வைத்தப் பணமும், சொத்தும் ஒருவரை விட்டுப்போவது கூத்து முடிந்ததும் மக்கள் அரங்கத்தைவிட்டுக் கலைந்து செல்வது போன்றதாகும் எனக் கூத்தின் மீதுள்ள மக்களின் ஈடுபாட்டினைக் கூறுகிறார் வள்ளுவர்.

கூத்தானது அந்தந்த மொழி, மண் சார்ந்த கலையாகப் பல வடிவங்களில் காணப்படுகிறது. கூத்து வகையுள் தமிழ்நாட்டின் பாரம்பரிய கலையான 'தெருக்கூத்து'. முற்றிலும் கிராமப்புறம் சாரந்த கலையாகும். கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பண்பாட்டினை எடுத்தியம்பும் உன்னதக்கலை தெருக்கூத்தாகும்.

**தெருக்கூத்து**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான, சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையில் மாதவி பதினொருவகையான கூத்துக்களை நடனமாடியதாகக் காணப்படுகிறது. அவை:

1. கொடுகொட்டி
2. பாண்டுரங்கம்
3. அல்லிக்கூத்து
4. மல்லாடல்
5. துடிக்கூத்து
6. குடைக்கூத்து
7. குடக்கூத்து
8. பேடிக்கூத்து
9. மரக்கால் கூத்து
10. பாவைக்கூத்து
11. கடையக்கூத்து

இதில் இடம்பெறும் கூத்து என்ற சொல்லாடல் நடனத்தைக் குறிக்கிறது. இப்பதினொரு வகையான கூத்துகளில் சில வளர்ச்சி அடைந்து இன்றும் ஆடப்பட்டு வருகின்றன.

- குடக்கூத்தானது தற்காலத்தில் கரகாட்டமாக, கோவில் விழாக்களில் நிகழ்த்தப்படுகிறது.
- குடைக்கூத்தானது முருகன் அசுரனை வென்றபின்னர் ஆடிய நடனம். இது காவடி ஆட்டத்தின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.
- துடிக்கூத்து- முருகன் சூரபதுமனைக் கொன்று உடுக்கை (துடி) கொண்டு ஆடிய ஆடல். இதில் கடலே அரங்கமாகக் கொள்ளப்பட்டது.
- பேடிக்கூத்தானது அலிக்கூத்து என்ற பெயரில் திருநங்கைகளால் நிகழ்த்தப்படும் ஆடல்.
- மற்றொரு கூத்தான மரக்கால் கூத்தானது, அசுரர்கள் தேள், பாம்பு, பூரான், நட்டுவாக்காலி போன்ற உருவங்களை எடுத்து கொடுஞ் செயல்கள் புரிவதைக்கண்டு பொறுத்திராத துர்க்கையானவள் மரக்கால் அணிந்து (அதாவது மரத்தாலான கால்களை அணிந்து) அவற்றை நசுக்கிக் கொல்லும்போது ஆடிய கூத்தானது, இன்று பொய்க்கால் குதிரை ஆட்டமாக ஆடி வருகின்றனர்.

  பாவைக் கூத்தானது, தோற்பாவைக் கூத்தாக நிகழ்த்தப்பட்டு வருகிறது.

இவைபோன்று பல ஆடல் கலைகள் பண்டைய காலம் முதல் வளர்ச்சியடைந்துள்ளன. இவையாவும் நாட்டிய வடிவிலேயே அமைந்திருப்பது கவனிக்கத்தக்கவையாகும். ஆதலால் மாதவியின்

பதினொரு வகையான ஆடல்களும் நடனமாகவோ, நாட்டிய நாடக அமைப்பிலோ அரங்கேறி இருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. இப்பதினொரு வகையும் கூத்திற்குரிய சில கதைகளை ஒட்டியே நிகழ்த்தப்பட்டிருப்பதால், பத்மா சுப்பிரமணியனின் 'பரத கலை' என்னும் நூலில் கூறியவாறு கூத்து என்பதே 'நாட்டியம்'. கூத்திலிருந்தே நாட்டியம் பிறந்தது என்பது தெளிவாகிறது. அதிலும் இன்று செவ்வியல் நடனமான பரதநாட்டிய நிகழ்ச்சியில் நாட்டிய நாடகம் என்னும் ஆடல்வகை தெருக்கூத்தின் அமைப்பிலே ஒத்திருப்பதை காணலாம். இவை வசனம், விருத்தம், பாடல், அடவுகள், அபிநயங்களைக்கொண்டு விளங்குகிறது. நாட்டியங்கள் நிகழ்த்தும் களமானது அமைந்திருக்கும் முறையைப்பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். அம்முறைகளின்படி ஆராய்ந்தோமானால் முற்றிலும் அது கூத்து(நாடக) பாணியின் மேடைஅமைப்பை ஒத்தே உள்ளது. சிவனும் உமையாளும் ஆடியலாதலால், இக்கூத்தினை ஆடும் கலைஞர்கள் முறையே கூத்தன், கூத்தி என அழைக்கப்பட்டனர்.

**'கூத்தில் சிறந்தது கூத்தன் கூத்து**
**கூத்தில் கனிந்தது கூத்தியின் கூத்து' (கூத்து நூல் 1987, 24)**

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் காணப்படும் வரியான 'தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே' என்பதும், சித்தர் பெருமக்களுள் ஒருவரான பாம்பாட்டிச் சித்தரின்,

**'தூக்கியநற் பாதங்கண்டேன் சோதியும் கண்டேன்**
**சுத்தவெளிக்கு உள்ளேயொரு கூத்தனைக் கண்டேன்**
**தூக்கிய சிரசின் மேல் வைத்த பாதம்**
**சற்குருவின் பாதம் என்று ஆடாய் பாம்பே'**

என்ற பாடலிலும் கூத்தனே எனும் சொல்லானது நடனங்களுக்கெல்லாம் தலைவனாக நடனமாடும் தில்லை நடராஜப்பெருமானைக் குறிக்கிறது. கூத்தன், கூத்தியின் நடனமே கூத்து என்று அழைக்கப்பட்டது. எனவே கூத்து என்பது பாரம்பரிய நடனமாகத் தொன்றுதொட்டு வருவதை அறியமுடிகிறது. இக்கலையைத் தெய்வத்தோடு ஒப்பிடுவதாலேயே, இது தெய்வ வழிபாட்டின் அங்கமாக நிகழ்கிறது என எண்ணத்தோன்றுகிறது.

இக்கூத்து வகையான நாட்டுப்புறக் கலையான தெருக்கூத்து என்ற நாட்டிய நாடகவகையும் வளர்ச்சியடைந்துள்ளது. இக்கலை சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி இருக்கவேண்டும் என ந.முத்துசாமி தனது 'அன்று பூட்டிய வண்டி' என்ற தெருக்கூத்து பற்றிய நூலில் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் தெருக்கூத்து தோன்றிய அதே காலகட்டத்தில்,

**கர்நாடகா - யக்ஷகானம் (500 முதல் 600 ஆண்டு வரலாறு)**
**கேரளா - கதகளி (17வது நூற்றாண்டு), கூடியாட்டம்**
**மஹாராஷ்ட்ரா - தமாஷா**
**ஜப்பான் - கபூக்கி**
**ஆந்திரா - வீதி நாடகம்**

போன்ற கலைவடிவங்களும் தோன்றியிருக்கின்றன. யக்ஷகானம், கபூக்கி, தெருக்கூத்து இம்மூன்றுக்கும் பொதுவான சில கூறுகளாக ஆடை மற்றும் முக ஒப்பனை, திரையுக்தி காணப்படுகிறது. விஜயநகரநாயக்கர் மற்றும் மராட்டிய மன்னர்களின் காலத்தில் வடிவமைத்த சிற்பங்களிலே தெருக்கூத்து, யக்ஷகானம், கதக்களி ஆகியவற்றின் உடை அமைப்பினைக் காணமுடிகிறது.

சோழர் காலத்தில் கலைகளை ஒரு பொக்கிஷமாக பேணிக்காத்தனர். அக்காலகட்டத்தில் கூத்தானது சிறப்புற்றோங்கியது. கோயில்கள் மிகுதியாய் வடிவமைக்கப்பட்டு கோவில் விழாக்களிலும் கூத்தை ஆடுவதற்கென கூத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு மானியங்களும் கொடுக்கப்பட்டுள்ள செய்தியினை ஆவணங்களிலிருந்து அறிகிறோம்.

நாயக்கர் காலத்தில் தெலுங்கில் யக்ஷகானமாக தெருக்கூத்து விளங்கியது. இன்றும் சரஸ்வதி மகாலில் தமிழ் நாடகங்கள் எல்லாம் தெலுங்கு எழுத்து வடிவில் இருக்கின்றன. மெலட்டூர் பாகவதமேளா என்ற தெலுங்கு யக்ஷகானம் இக்காலக்கட்டத்தில்தான் பிரபலமானது. தமிழ் நாடகங்கள் உட்பட எல்லா இலக்கியங்களும் தெலுங்கு எழுத்துவடிவில் ஆக்கப்பட்டன. நாயக்கர்

காலத்தில் தமிழ் தெருக்கூத்து நூல்கள், தமிழ் யக்ஷகானங்கள் என்று பெயர் கொண்டன என துளசி. இராமசாமி தனது 'ஒப்பீட்டுக் கூத்துக்கலைகள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தெருக்கூத்து பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்களுள் ஒன்று. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் ஒருங்கேகொண்ட கலை வடிவமாகும். இது கிராம மக்களின் பொழுதுபோக்கு ஊடகமாகவும், கிராமத்தின் மண் வாசனையும், அவர்களது வாழ்வாதாரங்களையும், மொழி, மதம் சார்ந்த பற்றுதலையும்கொண்ட கலையாகும். இக்கலை அக்காலக்கட்டம் மற்றும் தற்போதைய அமைப்பு, ஒப்பனை, நடைபெறும் இடம், நடத்தப்பெறும் முறை, இடம்பெறும் பாடல்கள், இசைக்கப்படும் இசைக்கருவிகள் என இக்கட்டுரையில் 'தெருக்கூத்து அன்றும் இன்றும்' எனத் தரப்பட்டுள்ளன.

**பெயர்க் காரணம்**

தெரு + கூத்து = தெருக்கூத்து. அதாவது, வீதிகள் இணையும் இடத்தினில் நடைபெறும் கூத்து தெருக்கூத்தாதலால், இது தெருக்கூத்து எனப் பெயர் பெற்றது. தெருவின் மூன்று அல்லது நான்கு வீதிகள் இணையும் இடத்திலோ, அல்லது நெற்கதிர்கள் தூவும் களத்தையே ஆடுகளமாகக்கொண்டதால் இதற்கு தெருக்கூத்து எனப் பெயர் ஆகும்.

**நடத்தப்பெறும் இடம்**

தெருக்கூத்துப் பொதுவாகக் கிராமங்களில் நான்குவீதிச் சந்திப்பில் சிறு களத்தைத் தேர்ந்தெடுத்து 14x14 என்ற அளவில் ஆடும் களத்தையும், அதன் பின்புறம் ஒப்பனை அறையை அமைக்க ஓலையில் பின்னப்பட்ட தடுப்புகளைக்கொண்டும் கீத்துக்கொட்டகையை அமைப்பர். ஆடுகளத்திற்கும், ஒப்பனை கொட்டகைக்கும் இடையில் ஒரு தடுப்புக்கீத்தை நிறுத்துவர். சில சமயங்களில் நெற்கதிர்களைத் தூவும் களத்தையே கூத்துக்களமாக மாற்றி அமைத்து நிகழ்த்துவர். திரௌபதை அம்மன் கோவில்கொண்ட ஊர்களில் அக்கோவிலுக்கு எதிரே மண்ணை நிரப்பி சற்றே உயர்த்தி கூத்துக்களத்தை அமைத்து ஆடி வருகின்றனர். இன்றும் இவ்வகையான களமானது தொடர்கிறது. சில கூத்துக்கதைகள் கூத்து நடைபெறும் கிராமம் முழுவதையுமே களமாகவும் எடுத்துக்கொள்கிறது. அக்காலங்களில் அரசனுக்காக (வேந்தன்) முன்னிலையில் ஆடிக்காட்டும் கூத்தை வேத்தியல் என்றும், பொது இடத்தில் மக்கள் முன்னர் ஆடிக்காட்டும் கூத்தை பொதுவியல் என்றும் குறிப்பிட்டனர்.

இன்று சிலகிராமங்களில் அரசின் உதவியோடு ஊருக்கு நடுப்பகுதியில் செங்கல் மற்றும் சிமெண்டாலான உயர்ந்த மேடைகளை அமைத்து, அதில் பொதுவான கிராம நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இன்று பெரும்பான்மையாகக் கூத்துக்கள் கோவில்சடங்காகவும், பொது நிகழ்வாகவும் நிகழ்த்தப்படுகின்றன. வடமாவட்டங்களான வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், காஞ்சிபுரம் முதலிய மாவட்டங்களிலே கோடை காலங்களில் திரௌபதை அம்மன் கோவில் திருவிழாவை ஒட்டி அதன் ஒருபகுதியாக கூத்தானது நடத்தப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் ஆடும் மேடையானது எவ்விதம் இருக்க வேண்டும் என அரங்கேற்றுக் காதையில் கூறப்பட்டுள்ளது. "எண்ணிய நூலோர்........ அருந்தொழில் அரங்கத்து"(3;95) பொதியமலையை போன்று உயர்ந்த நெடியமலையில் வளர்ந்திருக்கும் உயரமான மூங்கில்களிலே, ஒவ்வொரு கணுவுக்கும் ஒருசாண் தூரம் இடைவெளி உள்ளவாறு அமைந்த மூங்கிற்கோல் ஒன்றினை வெட்டி. அதனைச் சிற்ப நூலிலே சொல்லியவண்ணம் அடிபிசகாமல், சராசரி வளர்ந்துள்ள மனிதனின் கைப்பெருவிரலின் அளவிலே இருபத்து நாலு விரலளவு கொண்டதாக நறுக்குவர். இந்த அளவுகோலின்படி ஏழு அடி அகலமும், எட்டு அடி நீளமும் கொண்ட உயரமான நடன அரங்கம் அமைக்கப்பட்டது. நான்கு புறங்களிலும் தூண்களை நிறுத்தி, அவற்றின் மேல் உத்திரப்பலகைகளைப் பொருத்தினர். உத்திரப் பலகைகளுக்கும், நடனமேடைக்கும் இடையே நான்கு கோல் அகல இடைவெளி இருந்தது. அரங்கத்தினுள்ளே போவதற்கும், வருவதற்கும் இரண்டு வாயில்கள் அமைக்கப்பட்டன. அரங்கின் மேனிலை மாடத்தில், யாவரும் தொழுது போற்றுமாறு, நால்வகை வருணபூதங்களின் (வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்தகேசுரன்) உருவங்களை எழுதி வைத்தனர். தூண்களின் நிழல் அரங்கத்தில் விழாதவாறு ஒளிவிடும் நிலை விளக்குகளை வைத்தனர். அதன் பின்னர ஒருபக்கமிருந்து மறுபக்கம் செல்லுமாறு அமைந்த திரைச்சீலையும், இரண்டு பக்கமிருந்தும் நடுவே நோக்கி வருமாறு அமைக்கப்பட்ட திரையையும், மேலிருந்து கீழிறங்கி வரும் திரையையும் பாங்குடன் அமைத்தனர்.

அதன் பின்னர், பல ஓவிய வேலைப்பாடுகளுடன் மேல் விதானத்தை (பந்தல்) கட்டினர். புகழ் பெற்ற முத்து மாலைகளை அழகுபட பல நிலைகளில் அரங்கம் முழுதும் தொங்கவிட்டனர். இவ்வாறு புதுமையான பல அரிய வேலைப்பாடுகளுடன் மாதவி நடனமிடும் ஆடல் அரங்கம் அமைக்கப் பெற்ற செய்தியினைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

**நடத்தப்படும் நேரம்**

அன்று தெருக்கூத்தானது இரவு பதினொரு மணியளவில் மேளங்கட்டல் தொடங்கி விடியவிடிய நடத்தப்படும். சுமார் விடியற்காலை ஆறு மணியளவிலேயே மங்கலம் பாடி முடிப்பர்.

எந்த ஒரு விஷயத்திலும் குறுகிய நேரத்தை எதிர்பார்க்கும் இன்றைய சமூகத்தில், இரவு முழுவதும் நிகழ்த்தப்படும் தெருக்கூத்தை அத்தகைய பொறுமையுடன் ரசிக்கும்தன்மை இன்றைய தலைமுறையினருக்கு இருப்பதில்லை, அவர்களின் வேலைப் பளுவின் காரணமாக இரவு முழுவதும் நடைபெறும் கூத்து இரண்டு அல்லது மூன்று மணி நேரமாக நடத்தப்படுகிறது. இரவு முழுவதும் நடைபெறும் கூத்து என்பது மிகவும் குறைந்தே காணப்படுகிறது.

**இடம் பெறும் கதைகள்**

அக்காலக் கட்டங்களில் 10 அல்லது 11 நாள் திருவிழாவாகப் பகற் பொழுதில் பாரதக்கதையைப் பாரதப்பிரசங்கி கூறக் கேட்கிற பழக்கமும், இரவுநேரத்தில் அதேகதையைக் கூத்தாகப் பத்து நாட்களும் நிகழ்த்திப்பார்க்கிற பழக்கமும் இருந்தது. பாரதக் கதைகளைத்தவிர, கிராமத் தெய்வங்களின் கதைகளும் கூத்தாக நிகழ்த்தப்பட்டன.

இன்று மருத்துவம் சார்ந்தும், சுகாதாரம் சார்ந்தும், மேலை நாட்டுக் கதைகளைக்கொண்டும், தமிழ்ப் புதினங்களைக்கொண்டும் நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. தவிர, இன்றையக் காலக்கட்டத்தில் விழிப்புணர்வுகளை முன்னிறுத்தி அதனை கூத்துக்கலையின்மூலம் மக்களிடம் சேர்க்கின்றனர்.

**அன்று நிகழ்த்தப்பட்டவை**

- மகாபாரதம் அதன் கிளைக் கதைகளும்
- இராமாயணம் அதன் கிளைக் கதைகளும்
- இரண்ய சம்ஹாரம்
- அல்லி அர்ச்சுனா
- நளாயினி
- அரிச்சந்திரா

**இன்றைய கூத்துக்கள்**

- போத்த ராஜா திருமணம் (அ) போர் மன்னன்
- மின்னலொளி சிவபூஜை
- ரேணுகாம்பாள் சரித்திரம்
- பப்பரவாகனன் சண்டை
- பாவாடைராயன் பரமகேதணன் (அ) சக்திகும்ப மகத்துவம்
- ஸ்ரீ வராஹ அவதாரம்
- ஸ்ரீ சீனிவாச திருக்கல்யாணம்
- பாதாள அரக்கன்

**ஒப்பனை**

தெருக்கூத்தின் ஒப்பனையினை இரண்டாக வகைப்படுத்தலாம். அவை:

- முக ஒப்பனை
- ஆடை ஒப்பனை

**முக ஒப்பனை**

பழமையான இத்தெருக்கூத்துக் கலை முகஒப்பனையில் பெரியதொரு மாற்றத்தை இன்று அடைந்திருக்கிறது. அக்காலங்களில் செடி, கொடிகளை இழைத்துப் பச்சிலை நிறங்களைக்கொண்டு

வண்ணம் தீட்டினர். பல வண்ண நிறங்களைக்கொண்ட கற்களைத் தேய்த்து அதன் வண்ணங்களைப் பலவாறு பூசிக்கொண்டு ஆடினர். அதன்பின்னர் காலமாற்றத்தின் புதிய முயற்சிகளினால் குங்குமம், மஞ்சள், சந்தனம் போன்றவற்றைப் பயன்படுத்தினர்.

இன்றோ தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியால் வண்ண இரசாயனங்களைக்கொண்டு முகஒப்பனையைச் செய்து வருகின்றனர். இதற்கு அரிதாரம் என்ற பெயரும் உண்டு. அரிதாரம் என்னும் சித்தமருந்தின் மஞ்சள் நிறத்தைபோன்றே முகப்பூச்சுக் காணப்படுவதால், முகசாயப்பொடியை அரிதாரம் என்று இன்றும் கூறுகின்றனர். இவ்வகையான முகப் பூச்சுகளினால் ஒரு சில கலைஞர்களுக்கு சில சமயங்களில் முகத்தில் ஒவ்வாமை ஏற்படுகிறது. அதில் வெளிப்படும் ரஸாயன மணமானது உடம்பிற்கும் ஒவ்வாமையைச் செய்கிறது. எவ்வாறாக இருப்பினும் இக்கலைஞர்கள் இக்கூத்துத் தொழின்மீதுள்ள ஈடுபாட்டினால் இவற்றை பொருட்படுத்துவதில்லை.

**ஆடை ஒப்பனை**

தெருக்கூத்தில் பார்வையாளர்களை எளிதில் கவரும்வண்ணம் ஆடை ஒப்பனை உருவாக்கப்பட்டுள்ளது. பிரமாண்டமாகக் கட்டைகளால் உருவாக்கப்பட்ட புஜம், கிரீடம் போன்ற அணிகலன்களைக் கட்டிக்கொண்டு ஆடுவர். அக்காலங்களில் வீட்டில்உள்ள புடவை போன்ற துணிகளைக்கொண்டே ஒப்பனையை அமைத்துக்கொண்டனர். பின்னர் பார்வையாளர்களை எளிதில் கவரும்வண்ணம் இரவு நேரங்களில் பொலிவான நிறங்களைக்கொண்டு ஆடைகளை தைத்து ஆடினர். அவ்வாடைகளில் கற்பனைக்கேற்றார் போல் வடிவமைப்புகளை உருவாக்கினர்.

கதாபாத்திரத்தைப் பிரமாண்டமாகக் காட்டும்வண்ணம் தாளுகத்தை, கிரிடம், சிகுரேக், புஜம் போன்ற அணிகலன்களைக் கட்டினர். அதில் மாயையை உண்டு செய்யும் சிறுசிறு கண்ணாடித் துண்டினைப் புதைத்து அக்கட்டைகளுக்கு மேலும் அழகு சேர்த்தனர். ஒளியிலே மின்னுகின்ற அக்கண்ணாடிகளின் ஒளியானது மேடை முழுவதும் பரவி, இருளின் அழகை மேலும் அலங்கரிக்கிறது. இவை உடலில் 46 கட்டுகளைக்கொண்டு தரிக்கின்றனர்.

இன்று, அன்று பயன்படுத்திய ஆடைகளையே உபயோகப்படுத்தினாலும், அன்று 46 கட்டுகளாக இருந்தது. இன்று சிறிது குறைந்து காணப்படுகிறது. அதிலும் சில குழுக்கள் இன்று இவ்வாடையின் கனம் மற்றும் கடினத்தை ஏற்றுக் கொள்ளமுடியாமல் மேடைநாடகங்களில் அணியும் சிகினா ஆடைகளைப் பயன்படுத்துகின்றனர்.

**பாடல்கள்**

தெருக்கூத்துக் கலையினைப் பொதுவாகக் குருகுலவாச முறைப்படியே அக்காலத்தில் கற்றுக்கொண்டனர். தெருக்கூத்துக் குழுவின் ஆசிரியரை 'வாத்தியார்' என்றே அழைப்பர். பெரும்பாலான கலைஞர்கள் கல்வி அறிவின்மையால் ஏட்டில் எழுதப்பட்டப் பிரதிகளைப் படிக்கும் திறன்இல்லாத நிலையில், அவ்வாத்தியார் கூறும் முறைப்படியே, அவர் கற்றுக்கொடுக்கும் வண்ணமே அக்குழுவின் அடுத்த தலைமுறைக் கலைஞர்கள் பாடல்களை அதே நயத்துடன் இசைப்பர். கூத்து நடத்தப்படும் கிராமங்களுக்கும் புதிதாய் குழுவில் இணைந்த கலைஞர்கள் உடன்சென்று வாத்தியார் மற்றும் அவர் தலைமுறைக் கலைஞர்கள் மேடையில் ஆடும்போது செவி வழியாகவே கூத்து பிரதி முழுவதையும் மனப்பாடம் செய்தனர். அப்பாடல்கள் முறையே கூத்திற்கென வடிவமைக்கப்பட்ட சில இராக மெட்டுக்களைக் கொண்டு பாடுவர்.

இன்றோ பார்வையாளர்களின் ரசனை சினிமா மோகத்தில் மூழ்கிக் கூத்தின் பாடல் மெட்டியிலும் அதன் சாயையை எதிர்ப்பார்ப்பினால், சில கூத்துக் கலைஞர்களும் அவர்களின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்பக் கூத்துப் பாடலில் சினிமா இசை மெட்டுக்களைப் புகுத்தி நடத்தி வருகின்றனர்.

**இசைக் கருவிகள்**

தெருக்கூத்தில் இசைக் கலைஞர்களின் பங்கு இன்றியமையாதது. கூத்து தொடக்கம் முதற்கொண்டு மங்களம் வரை அவர்களின் ஒத்துழைப்பால் மட்டுமே கூத்து இரவு முழுவதும் நடத்தப்படுகிறது. அக்காலங்களில் வீட்டிலுள்ள செப்புக் குடங்களைக்கொண்டு மத்தளமாகவும், மிருகங்களின்

நரம்புகளினால் வடிவமைக்கப்பட்ட தந்திக்கருவிகளைக்கொண்டும் இசைத்தனர். பின்னர் மிருகத்தோலினால் உருவான மத்தளங்களைப் பயன்படுத்தினர். பொதுவாக மிருதங்கம், டோலக், முகவீணை, குழித்தாளம், ஆர்மோனியம், புல்லாங்குழல் போன்றவற்றைப் பயன்படுத்தினா். இவை அனைத்தும் கனத்த ஒலியை கொடுக்கக்கூடிய கருவிகள். இவற்றின் ஒலியானது கிராமம் முழுவதையும் ஆக்கிரமித்துவிடும் வல்லமைகொண்டது.

இன்று சில குழுக்களில் ஆர்மோனியம், புல்லாங்குழல் மற்றும் முகவீணையையும் தவிர்த்துக் கூத்து ஆடப்படுகிறது. ஆர்மோனியம், முகவீணை போன்ற கனத்த ஒலியுடைய கருவிகளினால் மேடையில் பாடும் பாடல்கள் பார்வையாளர்களுக்குக் சரிவரக் கேட்பதில்லை என்பதால் இவற்றைச் சில குழுக்கள் தவிர்த்து விடுகின்றனர்.

**அமைப்பு**

மகாபாரதம், இராமாயணம் இவற்றின் கிளைக் கதைகளைக்கொண்டே 20க்கும் மேற்ப்பட்ட பிரதிகளைக் கூத்தாக நடத்துகின்றனர். புராண நாடகங்கள் வாழ்வியல் நெறிகளைப்பற்றி விளக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கலையின்மூலம்தான் அறத்தைப் பற்றி தெளிவாகச் சொல்லமுடியும் என்று எண்ணினார்கள். மகாபாரதம் என்பது மண், பெண் என்ற பேராசையினால் என்ன விளைவுகள் நிகழும் என்பதைப் பற்றியும், மனித வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய அறத்தைப்பற்றியும், மேற்கொள்ளக் கூடாத தீமையைப்பற்றியும் அந்தக் காலத்திற்கு ஏற்றார்போல இக்கலையினூடே சொல்லி வந்தனா். அதிலும் பாஞ்சாலி சபதம், கர்ண மோட்ஷம், அர்ச்சுனன் தபசு, 18ஆம் போர், கீசக வதம் போன்ற நாடகங்கள் அறத்தைப்பற்றி மேலோங்கிப் பேசுகின்றன. ஒரு நடிகனானவன் அக்கதாப்பாத்திரமாக உடலாலும், உள்ளத்தாலும் உருமாறி இரவு முழுவதும் தர்ம, அதர்மத்தின் நெறிகளைப்பற்றி எடுத்துரைக்கின்றான். மழை வேண்டியும், வீட்டில் பல சுப நிகழ்ச்சிகளுக்கும், திருப்பதி போன்ற ஸ்தலங்களுக்கு சென்று வீடு திரும்பியதற்கும் மற்றும் கர்ம காரியங்களுக்கும் என மக்களின் வாழ்வோடு இணை பிரியாமல் இருந்த இந்நிகழ்த்தல் கலை மூலம் அன்று முன்னோர்கள் மக்களுக்கு அறத்தின் பால் ஈர்ப்பை ஏற்படுத்தினர். கூத்தில் படுகளம் என்று சொல்லக்கூடிய மகாபாரதத் திருவிழாவின் நிறைவு நாளன்று பஞ்ச பாண்டவருள் ஒருவரான பீமசேனன், துரியோதனனை வதம் செய்யும் நிகழ்வாக காலைப் பொழுதில் கூத்து நடைபெறும். அது பல சடங்குகளையும் தன்னுள் அடக்கி, அன்று அக்கிராமத்தின் முழுப் பகுதியையும் கூத்துக்களமாக மாற்றி, ஊர் கிராமத்து மக்களும் அதன் சடங்கில் பங்கெடுத்துக் கொள்வதன்மூலம், மக்களிடையே நிலவுகின்ற விருப்பு, வெறுப்புகள் நீங்கி ஒற்றுமையாய், கூத்துக் கலைஞருள் ஒருவராய் அதில் ஈடுபடுவர். அதன்மூலம் ஊரின் ஒற்றுமையின் வலிமையை மக்கள் உணர்கின்றனர். அன்றைய காலம் என்பது தெருக்கூத்தின்மூலம் இதுபோன்ற பல நல்ல விஷயங்களை மக்களுக்கு இக்கலை வழியே எருனுஓஜடேனூணுகுனடஓ
பார்வையாளர்கள் நன்கு பழக்கப்பட்டிருந்தார்கள்.

இன்று தெருக்கூத்து என்பது அந்த காலக்கட்டத்தில் நடத்தப்பட்ட அளவு அதிக அளவில் நடத்தப்படவில்லை எனும் நிலையே உள்ளது. எனினும் இன்றும் பல இடங்களில் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. ஆயினும் அதன்வழியே சொல்லும் செய்திகளும், நல்ல கருத்துக்களும் மக்களிடம் சென்று சேர்வதற்குள், இன்றைய திரைப்படம், தொலைக்காட்சி நாடகங்கள், ஆடல்கள் போன்றவற்றால் நிறைய சிதைவுகள் ஏற்பட்டுள்ளது. மக்கள் அதன்பால் கொண்ட ஈர்ப்பினால், நாகரிக வழக்கத்தினால் தெருக்கூத்திற்குப் பார்வையாளர்கள் வருவதும் மிகவும் அரிதாகிறது. அக்காலங்களில் நாடகங்கள் மட்டுமே மக்களுக்குப் பொழுது போக்காக மகிழ்ச்சிதரும் விதமாக இருந்தன. ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லை. நவீன வளர்ச்சியானது தெருக்கூத்துப் போன்ற நாட்டுப்புறக் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் பெரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது. வருமானம் போதுமான அளவு இல்லாத சூழ்நிலையில் கலைஞர்கள் இத்தொழிலையே மாற்றவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆயினும் பல கலைஞர்கள் இத்தொழிலைவிட மனம் இல்லாமல், இன்றும் அதனைப் பற்றிக்கொண்டு, அதன் செழுமையையும், தரத்தையும் பாதுகாத்துக்கொண்டு இருக்கின்றனர். பார்வையாளர்களை கலையின்மீது ஆர்வம் கொள்ளவைக்க பல யுக்திகளையும் கலைஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பார்வையாளர்களை எளிதில் கவரவேண்டும் என்ற நோக்கத்தில் இன்று கூத்தின் இடையிடையே பெரிய தலைவேடதாரிகளும், கட்டியக்காரனுடன் இணைந்து கூத்து வசனங்களுக்கு இடையே வட்டார மொழியில் பேசி பார்வையாளனுக்கும் கலைஞனுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றார். பல சவால்களை எதிர்த்து அதன் முறைகளை ஒவ்வொரு காலகட்டத்திலும், அன்றைய பார்வையாளனுக்காக மாற்றி அமைத்த பிறகும் இன்று கிராமப்புறங்களிலே கூத்தை ரசிக்கப் பார்வையாளர்கள் வருவதில்லை என்பது வருத்தத்திற்குரியதாக உள்ளது. எனினும் இன்றைய தலைமுறையினர் மீண்டும் பழமையின்மீதுகொண்ட ஈர்ப்பினால், இக்கலைகளைப் புதுப்பிக்கும் நோக்கத்துடனும் விரிவுரை செயல் விளக்கங்களும், பயிற்சிப் பட்டறைகளும் மேற்கொண்டு வருகின்றனர். சில கூத்துக்குழுக்கள் மேலைநாட்டு குழுக்களுடன் இணைந்து கதைகளைக் கூத்தாக நிகழ்த்துகின்றனர். அதன்மூலமும் இக்கலையானது இன்று உயிர்ப்புடன் இருக்கிறது.

**முடிவுரை**

எக்காலமானாலும் மக்கள் இறைவன் மீதும் வழிபாட்டின் மீதும் கொண்டிருக்கின்ற அதீத நம்பிக்கையே, அதன் வெளிப்பாடே இக்கூத்துக் கலையை அழியாமல் வளரக் காரணமாக இருக்கின்றன. இன்றைய காலக்கட்டத்தில் தெருக்கூத்துக் கலையினை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் ஒலிப்பரப்பி வருகின்றனர். அரசும் பல நலத்திட்டங்களை நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது என்பது தெருக்கூத்துக் கலையின் சிறப்பினைப் பறை சாற்றுகிறது.